மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.
முன்னிலை - திரு.ஆர்.பாரதிராஜா,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஜெயங்கொண்டம்.

2017 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

**அசல் வழக்கு எண் - 386/2015**

கண்ணன் .... வாதி

//எதிர்//

இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் ரெப்ரசெண்டட் பை மேனேஜர் .... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 19.06.2017 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.மணி,வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகாமல் இருந்த நிலையில் பிரதிவாதியை அழைத்தும் வருகை தராததால் பிரதிவாதி தரப்பில் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டும் வாதிதரப்பு வாதங்களைக் கேட்டும் சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

WEB COPY

**தீர்ப்புரை**

1) நகை கடன் எண்1648/11ல் உள்ள வாதிக்கு சொந்தமான 14 அயிட்ட நகைகள் சம்மந்தமாக பிரதிவாதி நடத்தி முடித்த ஏலம் செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டியும், தாவா செலவுத் தொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்க வேண்டியும் வாதியல் இத்தாவா தாக்கல்.

**2, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் சுருக்கம்**

வாதி பிரதிவாதியின் வங்கியில் அவருடைய 14 அயிட்டங்கள் அடங்கிய மொத்தம் 172.900 கிராம் எடையுள்ள நகைகளை அடகு வைத்து பிரதிவாதியிடம் இருந்து 1648/11 கடன் எண்ணில் 9.12.11ம் தேதி மாதத்திற்கு ரூ.100க்கு 7 சதவீதம் வட்டி என்பதின் அடிப்படையில் ரூ.2,60,000 தொகையை கடனாக பெற்றுள்ளார். வாதிக்கு பிரதிவாதியின் வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. சேமிப்பு கணக்கு மற்றும் கடன் வாங்கிய ஆதிரவுகளில் வாதியின் குடியிருப்பு விலாசம் தெளிவாக குறிப்பிடப்பட்டு உள்ளது.

வாதி அவருடைய மனைவிக்கு குழந்தை பிறக்காமல் அடிக்கடி கலைந்து போன காரணத்தினால் வைத்தியம் செய்வதிற்காக வாதி அவருடைய நகைகளை பிரதிவாதியின் வங்கியில் அடகு வைத்து கடன் பெற்றிருந்தார். 20.01.2014ம் தேதி வாதி

ரூ.18000த்தை வட்டிக்காக செலுத்தி ரசீதும் பெற்றுள்ளார். அதன் பிறகு பிரதிவாதியின் வங்கியில் இருந்து எந்தவித நோட்டீசும் வாதிக்கு வரவில்லை. வாதி 01.12.14ம் தேதி திரும்பவும் வங்கிக்கு சென்று வாதி பிரதிவாதியிடம் பெற்ற நகை கடன் மற்றும் வட்டியை பிரதிவாதியின் வங்கியிலரிருந்து விபரம் தெரிந்து கொண்டுள்ளார். பிரதிவாதி 01.12.2014ம் தேதி கடன் வட்டி விபரங்களை குறித்து கொடுத்துள்ளார்.

வறுமையின் காரணமாகவும், வருமானம் எதுவும் இல்லாத காரணத்தினால் உடனடியாக வாதியால் நகை கடன் அசல் மற்றும் வட்டியை செலுத்த இயலவில்லை. வாதியின் உறவினர் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்த போது நகை கடன் முழுவதையும் அடைக்க வாதிக்கு பணம் கொடுத்துள்ளார். வாதியாகவே 09.06.2015ம் தேதி பிரதிவாதியிடம் சென்று அசல் வட்டி தொகை ரூ.3,70,000ம் கொடுக்க வேண்டிய விபரத்தை நேரில் சென்று தெரிந்து கொண்டுள்ளார். பிரதிவாதி 10.06.2015ம் தேதி வந்து கடனை பைசல் செய்து கொள்ளுமாறு வாதிக்கு அறிவுறுத்தி உள்ளார். பிரதிவாதி மொத்த அசல் வட்டி தொகையை பைசல் செய்வதிற்காக பிரதிவாதியின் வங்கிக்கு பகல் 11 மணியளவில் சென்றுள்ளார். ஆனால் பிரதிவாதி வாதி எடுத்துச் சென்ற அசல் வட்டி தொகையை பெற்றுக் கொள்ளாமல் பேப்பரில் விளம்பரம் கொடுத்துவிட்டு நகையை ஏலம் போட்டுவிட்டதாக கூறியுள்ளார். பேப்பரில் விளம்பரம் கொடுத்தது வாதிக்கு தெரியவில்லை. பேப்பரில் விளம்பரம் கொடுப்பதற்கு முன்பு சட்டப்படி பிரதிவாதி எனக்கு நகையை ஏலம் போடுவது குறித்து கடிதம் மற்றும் ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் நோட்டீஸ், கொடுத்துவிட்டுதான் ஏலம் நடத்தியிருக்க வேண்டும். பிரதிவாதி எந்தவித சட்டப்படி நடைமுறையையும் பின்பற்றவில்லை.

பிரதிவாதியின் செய்கை சட்டவிரோதமான செயலாகும். பிரதிவாதி வாதிக்கு எந்தவித நோட்டீசும் கொடுக்கவில்லை. வாதியின் நகைகளை ஏலம் விட வேண்டுமானால் வாதிக்கு முறையாக சட்டப்படி வங்கி விதிமுறைகளின்படி நோட்டீஸ் முறையாக அனுப்பியதற்குதான் பிரதிவாதி வாதியின் நகைகளை ஏலம் வி வேண்டும். அவ்வாறு எந்தவித சட்டப்படியான விதிமுறைகளை கடைபிடிக்காமல் பிரதிவாதி வாதியின் நகைகளை ஏலம் நடத்தியுள்ளார். ஏலம் விடப்பட்டதின் தொகை எவ்வளவு,

WEB COPY

கடன் தொகை எவ்வளவு, பாக்கி தொகை எவ்வளவு, எப்போது ஏலம் விடப்பட்டது என்கிற விபரங்களையும் பிரதிவாதி வாதிக்கு தெரிவிக்க மறுத்து வருகிறார்.

வாதி பிரதிவாதியின் ஏல நடவடிக்கைகள் சட்டவிரோதமானது என்று வக்கீல் வைத்து பிரதிவாதிக்கு 16.06.2015ம் தேதி ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் நோட்டீசையும் அனுப்பியுள்ளார். பிரதிவாதி நோட்டீசை பெற்றுக் கொண்டு எந்தவித பதிலும் கொடுக்கவில்லை. வாதி முறைகேடாக நகை ஏலம் விடப்பட்டது சம்மந்தமாக 29.06.2015ம் தேதி அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் பிரதிவாதியின் பேரில் புகார் கொடுத்துள்ளார். வாதியின் நகைகள் முறைகேடாக நகை ஏலம் விடப்பட்டது சம்மந்தமாக 27.11.2015ம் தேதி பிரதிவாதியின்பேரில் வாதி மீன்சுருட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மனு ரசீதும் பெற்றுள்ளார். வாதி பிரதிவாதி பேரில் எடுத்த அனைத்து நடவடிக்கைகளையும் பிரதிவாதி அதிகார பலம் மற்றும் ஆள் பலம் கொண்டு முறியடித்துள்ளார்.

WEB COPY

பிரதிவாதி வாதியின் நகைகளை எந்தவித முன்அறிவிப்பும் இல்லாமலும், சட்டப்படி வங்கி விதிமுறைகளின்படி நடக்காமலும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் செயல்பட்டு வாதியின் நகைகளை ஏலம் போட்டுள்ளது சட்டப்படி செல்லாததாகும். படிப்பறிவு இல்லாத வாதியை பிரதிவாதி ஏமாற்றி உள்ளார். ஆகவே வாதி பிரதிவாதியின் ஏலம் செல்லாது என்று டிக்ளர் செய்ய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

வாதி தரப்பில் வாதி கண்ணன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, கங்கைகொண்ட சோழபுரம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் பெற்றதற்கான நகை கடன் கார்டு வா.சா.ஆ.1 ஆகவும், 20.01.2014ம் தேதி நகை கடன் வட்டி செலுத்தியதன் ரசீது வா.சா.ஆ-2 ஆகவும், 01.12.2014ம் தேதி வங்கியில் கொடுத்த நகை கடன் கணக்கு விபரம் வா.சா.ஆ.3 ஆகவும், வாதி பெயரிலுள்ள சேமிப்பு கணக்கு பாஸ்புக் வா.சா.ஆ-4 ஆகவும், 16.06.2015ம் தேதி வக்கீல் நோட்டீசும், அக்னாலட்ஜ்மென்டும் வ.சா.ஆ.5 ஆகவும், 29.06.2015ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மனு ரசீது வா.சா.ஆ.6 ஆகவும், 27.11.2015ம் தேதிய மீன்சுருட்டி ஆய்வாளரிடம் கொடுத்த மனு

வா.சா.ஆ.7 ஆகவும், 27.11.2015ம் தேதி காவல் நிலையத்தின் மனு ரசீது வா.சா.ஆ.8 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**<u>3,இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா?</u>**

வாதி பிரதிவாதியின் வங்கியில் அவருடைய 14 அயிட்டங்கள் அடங்கிய நகைகளை அடகு வைத்து பிரதிவாதியிடம் இருந்து 1648/11 கடன் எண்ணில் 09.12.2011ம் தேதி ரூ.2,60,000ம் தொகையை கடன் பெற்றுள்ளதாகவும், அதற்கு ஆதரவாக வங்கியில் கடன் பெற்றதற்கான நகை கடன் கார்டு வா.சா.ஆ.1 ஆகவும், அந்த நகை கடனுக்காக 20.01.2014ம் தேதி வட்டி செலுத்தியதின் ரசீது வா.சா.ஆ.2 ஆகவும், வாதி 01.12.2014ம் தேதி வங்கிக்கு திரும்பவும் சென்று பிரதிவாதியிடம் பெற்ற நகை கடன் மற்றும் வட்டியை வங்கியிலிருந்து விபரம் தெரிந்து கொண்டுள்ளதாகவும், அந்த பேங்கில் கொடுத்த நகை கடன் கணக்கு விபரம் வா.சா.ஆ.3 ஆகவும், வாதியின் பெயரிலுள்ள சேமிப்பு கணக்கு பாஸ்புக் வா.சா.ஆ-4 ஆகவும், பிரதிவாதியின் ஏல நடவடிக்கைகள் சட்டவிரோதமானது என்று வாதி பிரதிவாதிக்கு 16.06.2015ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அந்த அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆகவும், வாதி முறைகேடாக நகை ஏலம் விடப்பட்டது சம்மந்தமாக 29.06.2015ம் தேதி அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் பிரதிவாதியின் பேரில் புகார் கொடுத்துள்ளார். அது வா.சா.ஆ.6 ஆகவும், 27.11.2015ம் தேதி அன்று மீன்சுருட்டி ஆய்வாளரிடம் கொடுத்த மனு வா.சா.ஆ.7 ஆகவும், 27.11.2015ம் தேதி அன்று காவல்நிலையத்தின் மனு ரசீது வா.சா.ஆ.8 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்துப் பார்க்கும்போது தெரிய வந்தது.

WEB COPY

மேலும், பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், மறுக்கப்படாமலும் உள்ளது. எனவே மறுக்கப்படாத சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக கருதப்படும் என்பதன்படி பார்க்கும்போது பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், வாதியின் வழக்குக்கு மறுப்பு ஏதும் எழுப்பப்படாமல் தோன்றா தரப்பினராக உள்ளதை வைத்து பார்க்கும்போது வாதியின் வழக்கை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாகவே கருத இயலுகிறது. எனவே வாதி கோரியவாறு பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்வுகாணப்படுகிறது.

DMC, JKM
OS.No.385/15
Judg. Dt.23.06.2017

முடிவாக நகை கடன் எண் 1648/11ல் உள்ள வாதிக்கு சொந்தமான 14 அயிட்ட நகைகள் சம்மந்தமாக பிரதிவாதி நடத்தி முடித்த ஏலம் செல்லாது என்று விளம்புகை செய்தும், தாவா செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது,

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2017 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது,

(ஓம்)திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

WEB COPY

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**
வா.சா. 1 கண்ணன்

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

வா.சா.ஆ.1- கங்கைகொண்ட சோழபுரம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் பெற்றதற்கான நகை கடன் கார்டு
வா.சா.ஆ.2- 20.01.2014ம் தேதி நகை கடன் வட்டி செலுத்தியதன் ரசீது
வா.சா.ஆ.3- 01.12.2014ம் தேதி வங்கியில் கொடுத்த நகை கடன் கணக்கு விபரம்
வா.சா.ஆ.4- வாதி பெயரிலுள்ள சேமிப்பு கணக்கு பாஸ்புக்
வா.சா.ஆ.5- 16.06.2015ம் தேதி வக்கீல் நோட்டீசும், அக்னாலட்ஜ்மென்டும்
வா.சா.ஆ.6- 29.06.2015ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மனு ரசீது
வா.சா.ஆ.7- 27.11.2015ம் தேதிய மீன்சுருட்டி ஆய்வாளரிடம் கொடுத்த மனு
வா.சா.ஆ.8- 27.11.2015ம் தேதி காவல் நிலையத்தின் மனு ரசீது

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**
இல்லை.

(ஓம்)திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.